தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை, 1984 மார்ச் 26.

பங்குனி 13, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு 2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக்.

*110 வினா.—திரு. ம. சங்கரலிங்கம், திரு. பா. ரா. தாமஸ் (திரு. த. சந்தோஷம் சார்பிலும்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) செட்டிநாடு, அண்ணாமலை பாலிடெக்னிக், 1970 ஆம் ஆண்டிலிருந்து அரசின் நேரடி மேற்பார்வையில் இருந்து வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் அரசு ஊழியர்களாகக் கருதப்படுகிறார்களா ?

(உ) அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் இதர ஊழியர்களில், இரண்டு வருடங்களுக்கு மேல் பணிபுரிந்தும் வேலையில் நிரந்தரப்படுத்தப் படாதவர் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) ஆம்.

(இ) மேற்படி பாலிடெக்னிக்கை, அரசு எடுத்துக்கொண்டதாக ஆணை வழங்கப்படாமல் இருப்பதால், அங்கு பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள், அரசு ஊழியர்களாகக் கருதப்படவில்லை.

(உ)	ஆசிரியப் பணியாளர்கள்	9
	ஆசிரியரல்லாத பணியாளர்கள்	12
	மொத்தம்	21

திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, செட்டிநாடு அண்ணாமலை பாலிடெக்னிக் 1970-லிருந்து அரசின் நேரடிப் பார்வையில் இருந்தும், அது அரசு பாலிடெக்னிக் என்று அறிவிக்கப்படாமல் இருப்பதால், அங்கு பணிபுரியும் ஊழியர்கள், ஆசிரியர்கள் எந்தப் பணியிலும் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த நிலையை அகற்ற, அந்தப் பாலிடெக்னிக்கை அரசு பாலிடெக்னிக் என்று அறிவித்து, அங்கே பணி புரிபவர்களின் சர்வீஸ் கண்டிஷனிலே இருக்கக்கூடிய சிக்கல்களை அகற்ற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, இந்தப் பல்தொழில் பயிற்சிப் பயிலகத்தைத் தொடர்ந்து நடத்த நிதி நிலைமை இடம் தராததால், அதை அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று அந்த நிர்வாகக் குழு கேட்டுக்கொண்டது. எனவே அந்தப் பல்தொழில் பயிற்சிப் பயிலகத்தை 1970 நவம்பர் முதற்கொண்டு அரசு ஏற்று நடத்தி வருகிறது. அதன் நிர்வாகத்திலிருந்து பெறப்பட்ட வரைவுத் தீர்வை பத்திரத்தில் கல்வித் துறைச் செயலாளரால் கையொப்பமிட்டு அண்ணாமலை பல்கலைப் பயிலக முதல்வருக்கு பதிவுக்காக இயக்குநரால் அனுப்பப்பட்டுள்ளது. பத்திர நகல் பதிவு செய்யப்பட்ட பின்னர்தான், இப்பயிலகத்தை அரசு முறையாக ஏற்றுக் கொண்டதாக ஆணை பிறப்பிக்க இயலும். ஆகவே அந்தப் பத்திரத்தில் அந்த நிர்வாகம் கையெழுத்திட்டால்தான், அரசு பயிற்சிப் பயிலகமாக அதை அறிவிக்க இயலும். இந்தச் சந்தர்ப்பத்தில் 12—3—1984 கடிதத்தில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அண்ணாமலை பாலிடெக்னிக்கை 1983 ஜூன் முதல் அவர்கள் அறக்கட்டளையே தொடர்ந்து நடத்த விருப்பம் என்று தெரிவித்திருக்கிறார்கள். பத்திரத்தில் கையெழுத்திடாததால், பத்திரம் பதிவாகாத நிலையில், அதை அரசு பாலிடெக்னிக்காக அறிவிக்க இயலாமல் இருக்கிறது.

1984 மார்ச் 26]

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவரவர்களே, அவர்கள் பண நெருக்கடி ஏற்பட்டபோது, அரசின் கையிலே ஒப்படைத்துவிட்டு, அரசு பல நெருக்கடியான கால கட்டங்களையெல்லாம் கடந்த பிறகு, இப்போது பாலிடெக்னிக்கை நடத்துவதில் லாபகரமான சூழ்நிலை வந்த பிறகு, அவர்களே நடத்தப் போவதாகச் சொல்வதை அரசு ஏற்றுக்கொள்கிறதா? அங்கே வேலை பார்க்கும் ஆசிரியர்கள், பல வருடங்களாகியும் பணி வரன்முறை செய்யப் படாமல் இருக்கும் அவல நிலையை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, 1970 முதல் அதை அரசு ஏற்று நடத்தி வருவதால் இதுவரை ரூ. 10,36,344 செலவாகியிருக்கிறது. இதை நாம் சொன்னபோது, டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் இத்தொகையை வசூலிக்காமல், அவர்களுக்கு அந்தப் பாலிடெக்னிக்கைத் திருப்பித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி இப்போது அரசாங்கம் பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. விரைவில் அதுபற்றி முடிவெடுக்கும்.

திரு. பா. ரா. தாமஸ்: ஏற்கெனவே 1970-ல் அரசுக்குக் கொடுத்துவிடுவோம் என்று அக்ரிமெண்ட் ஒன்று போட்டு, மறு மதிப்பீடாக ரூ. 1.6 லட்சம் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஸ்டாம்ப் டியூட்டி தவிர்ப்பு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். சமுதாய நல பாலிடெக்னிக் திட்டம் என்ற முறையில் மத்திய அரசு உதவி பெற்று, ஆசிரியர்களுடைய சேமநல நிதிக்கு அரசாங்கம் 3 விழுக்காடு தொகை தந்ததோடு, விருந்தினர் விடுதிக்கு பல லட்சம் ரூபாய் முதலீடும் செய்துள்ள நிலையில், இப்போது அவர்கள் ஒப்பந்தத்தை மீறுவதற்குக் காரணம் என்ன? அரசு பல லட்சம் ரூபாய்களை முதலீடு செய்துள்ளதால், அக்ரிமென்ட்படி அந்தப் பயிலகத்தை மாற்ற வேண்டுமென்று அரசு நிர்ப்பந்திக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: 1970-ல் ஒரு பாலிடெக்னிக் நடத்துவதற்கு எவ்வளவு மானியத் தொகை கொடுத்து வந்தோமோ அதைவிட இப்பொழுது அதிகமாக வழங்கி வருகிறோம். ஆகவே அரசின் உதவியைப் பெற்று பாலிடெக்னிக் நடத்துவது என்பது இப்பொழுது அவ்வளவு கடுமையானதாக இல்லை. அவர்கள் இப்பொழுது எடுத்து நடத்தலாமென்ற ஒரு நிலைமைக்கு வந்திருக்கிறார்கள் போலும். ஆனால் அரசு அவர்களுடைய கோரிக்கையை இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

திரு. ஆ. நல்லசிவன் : 10 வருடங்களுக்கு மேலாக 10 லட்சம் ரூபாய்க்கு மேல் அரசுப் பணம் அதற்காகச் செலவிடப்படுகிறது. அதை அரசே ஏன் 'டேக்-ஓவர்' பண்ணக்கூடாது ? இதை முதலிலேயே செய்திருக்கலாம் அல்லவா? இவ்வளவு அரசுப் பணம் செலவிடும் நிலையிலும் கூட நிர்வாகம் நினைத்தால் அவர்கள் கைவசம் வைத்துக்கொள்ளலாமென்ற நிலைமை இருப்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு பத்திரம் பதிவு செய்தல் போன்ற பணிகளை எல்லாம் வேகமாகச் செய் திருக்கிறோம். இது 1970-ல் நடைபெற்றது. ஆனால் 1977-ல் இருந்து நாங்கள் சில காரியங்களைச் செய்திருக்கிறோம். இப்பொழுது அவர்கள் மானியத்தை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

Thiagarajar College of Engineering, Madurai.

* 111 Q. THIRU P. R. THOMAS (on behalf of Thiru D. Santosham): Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether thirty seven students of the Thiagarajar College of Engineering, Madurai, were suspended in connection with the murder of two other students of the same college;

(*b*) whether thirty five of the said students have been totally acquitted by the Sessions Court and whether they have thereupon applied to the Government for transfer to some other College of Engineering with permission to resume their studies there; and

(*c*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 30—3—1981 அன்று மதுரை தியாகராயர் பொறியியற் கல்லூரியில் இரண்டு மாணவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து 37 மாணவர்கள் கல்லூரியிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார்கள்.